பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

30. 11. 2024 **SATURDAY** 7. 15 **AM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைமை இயக்குநர்கள் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்றுகிறார்..

2. ஜவுளித் தொழிலில் பெண்களின் பங்களிப்பு கணிசமாக அதிகரித்துள்ளதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** கூறியுள்ளார்.

3. வங்கக்கடலில் உருவான **Fenjal** புயல் இன்று புதுச்சேரி அருகே கரையை கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

4. தோட்டக்கலை விவசாயிகளுக்கு சான்றளிக்கப்பட்ட நோய் இல்லாத செடிகளை வாங்குவதற்கான கடன் ஒப்பந்தத்தில் மத்திய அரசும், ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது..

**>>>>><<<<<**

ஒடிசா மாநிலம், புவனேஸ்வரில் நடைபெறும் காவல்துறை தலைமை இயக்குநர்கள் மாநாட்டில், பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்றும் நாளையும் பங்கேற்கிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா நேற்று இந்த மாநாட்டை தொடங்கி வைத்தார்.

தேசிய பாதுகாப்பு பிரச்சினைகள் தொடர்பாக, காவல்துறை உயரதிகாரிகளுடன் மத்திய உள்துறை அமைச்சகத்தின் உயரதிகாரிகள் கலந்துரையாடும் வகையில் இந்த மாநாடு நடைபெற்று வருகிறது.

தீவிரவாத தடுப்பு நடவடிக்கை, நக்ஸல் தீவிரவாதம், கடலோர பாதுகாப்பு, புதிய குற்றவியல் சட்டங்கள், போதைப்பொருள் கடத்தல் தடுப்பு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் இம்மாநாட்டில் விவாதிக்கப்படவுள்ளது.

சிறப்பாக பணிபுரிந்த காவல்துறை அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவரின் காவல் பதக்கங்களும் வழங்கப்படவுள்ளது.

இந்த மாநாடு குறித்து, பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த காவல்துறை உயரதிகாரிகளின் சிறந்த ஆலோசனைகளை கேட்பதற்கு, பிரதமர் மிகவும் ஆர்வமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், பிரதமரின் முதன்மைச் செயலர் திரு. பி.கே. மிஸ்ரா உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

**>>>>><<<<<**

ஜவுளித் தொழிலில் பெண்களின் பங்களிப்பு கணிசமாக அதிகரித்துள்ளதாக மத்திய ஜவுளித்துறை இணையமைச்சர் திரு. **Pabitra Margherita** கூறியுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்திய அரசின் ஜவுளித்துறை திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 3 லட்சத்து 60ஆயிரம் பெண்கள் பயனடைந்துள்ளதாக கூறினார்.

மத்திய அரசு எடுத்த முன்முயற்சியால் ஜவுளித்தொழிலில் வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளதாகவும், ஏற்கனவே அந்த துறையில் உள்ள தொழிலாளர்களின் திறன் மேம்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்றவர்களில் 80 சதவீதத்தினர் பெண்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக ஜவுளித் தொழில் 4 கோடியே 50 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

2030ஆம் ஆண்டுக்குள் 10 கோடி பேருக்கு வேலைவாய்ப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு. **Pabitra Margherita** தெரிவித்தார்.

**>>>>><<<<<**

தோட்டக்கலை விவசாயிகளுக்கு சான்றளிக்கப்பட்ட நோய் இல்லாத விதைகளை வாங்குவதற்கான 98 மில்லியன் டாலர் மதிப்பிலான கடன் ஒப்பந்தத்தில் மத்திய அரசும், ஆசிய வளர்ச்சி வங்கியும் கையெழுத்திட்டுள்ளன.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பொருளாதார விவகாரங்கள் துறையின் இணைச் செயலர் திருமதி. **Juhi Mukherjee,** ஆசிய வளர்ச்சி வங்கி வழங்கவுள்ள கடனுதவி, நாட்டில் தோட்டப் பயிர்களின் ஆரோக்கியத்தையும், விவசாயிகளின் உற்பத்தி திறனையும் மேம்படுத்தும் என்று கூறினார்.

இந்தியாவில் தோட்டக்கலைத்துறையை திறம்பட செயல்படுத்தவும், அதற்கான ஒழுங்குமுறை கட்டமைப்புகளை உருவாக்கவும் இந்த கடனுதவி உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனியார் நாற்றங்கால் வளர்ப்போர், ஆராய்ச்சியாளர்கள், மாநில அரசுகள் மற்றும் விவசாயிகளின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

பருவநிலை மாற்றத்தால் பூச்சிகள் மற்றும் நோய்கள் அதிகரித்து வரும் நிலையில், சான்றளிக்கப்பட்ட தாவரங்கள் விவசாயிகள் அந்த பிரச்சினையை சமாளிக்க உதவிடும் என்று திருமதி. **Juhi Mukherjee** கூறினார்.

**>>>>><<<<<**

அரசியல் சாசனம் அறிவோம் குறித்த சிறப்பு நேர்காணல் நிகழ்ச்சிக்கு சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கறிஞர் ஷாமிலி ராஜ்குமாருடன், ஊடகவியலாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்கும் இந்த நிகழ்ச்சியின் இரண்டாம் பகுதி ஒருங்கிணைந்த அலைவரிசையில் இன்றிரவு எட்டரை மணிக்கு ஒலிபரப்பாகிறது.

**>>>>><<<<<**

வங்கக்கடலில் உருவான **Fenjal** புயல் இன்று கரையை கடக்கிறது.

இந்தப் புயல் மகாபலிபுரத்திற்கும் காரைக்காலுக்கும் இடையே புதுச்சேரி அருகே இன்று பிற்பகல் கரையை கடக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் காரணமாக, வட தமிழ்நாடு, ராயலசீமா, ஆந்திராவின் தெற்கு கடலோரப் பகுதிகள், புதுச்சேரி ஏனாம் ஆகிய பகுதிகளில் பலத்த மழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரளாவின் ஒரு சில இடங்களிலும், மாஹே, தெற்கு கர்நாடகாவின் உட்பகுதிகள், அந்தமான் நிகோபார் ஆகிய பகுதிகளிலும் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புயல் காரணமாக, சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை, மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி உட்பட 9 மாவட்டங்களில் பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்று தமிழக அரசு விடுமுறை அறிவித்துள்ளது.

மாணவர்களுக்கு சிறப்பு வகுப்பு, தேர்வு போன்ற எதையும் நடத்த வேண்டாம் என்று மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தங்களது பணியாளர்களை இன்று வீட்டிலிருந்து பணிபுரிய அனுமதிக்க மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

இன்று பிற்பகல் புயல் கரையை கடக்கும்போது, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் பழைய மகாபலிபுரம் சாலையில் பொதுப் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

புயல் கரையை கடக்கும் போது, கனமழை மற்றும் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், பொதுமக்கள் அனைவரும் அத்தியாவசிய தேவை தவிர, இதர பணிகளுக்கு வெளியில் வருவதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

புயல் காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் எண்ணூர் முதல் பழவேற்காடு வரை, கடலோரப் பகுதிகளில் உள்ள மீனவ கிராமங்களில் கடல் அலைகளின் சீற்றம் அதிகரித்து காணப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - தனசேகரன் 45 செகண்ட்ஸ்)

புயல் காரணமாக அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பொறியியல் கல்லூரிகளில் இன்று நடைபெறவிருந்த தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழக தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் திரு. சக்திவேல் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

துபாயில் நடைபெறவுள்ள இப்போட்டி, இன்று காலை மணி 10.30-க்கு தொடங்குகிறது.

இன்று சார்ஜாவில் நடைபெறவுள்ள மற்றொரு போட்டியில், ஐக்கிய அரபு எமிரேட் அணி - ஜப்பானை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்தியா – ஆஸ்திரேலிய பிரதமரின் லெவன் அணிகளுக்கு இடையேயான இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்கவுள்ளது.

கான்பராவில் நடைபெறவுள்ள இப்போட்டி இந்திய நேரப்படி இன்று காலை மணி 9.10-க்கு தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் இந்திய அணி, ஆஸ்திரேலிய பிரதமரின் லெவன் அணியுடன் விளையாடுவது இது நான்காவது முறையாகும்.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி, ஆஸ்திரேலியாவின் அனுபவமிக்க கிரிக்கெட் வீரர்களை இப்போட்டியில் சந்திக்கவுள்ளது.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஈஸ்ட் பெங்கால் அணி 1-0 என்ற கோல்கணக்கில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணியை வென்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் மும்பை அணி – ஹைதராபாத் அணியையும், மோகன் பஹான் அணி – சென்னை அணியையும் எதிர்கொள்ளவுள்ளது.

>>>>><<<<<

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியானா 42-30 என்ற புள்ளிக்கணக்கில் தமிழக அணியை வென்றது.

மற்றொரு போட்டியில் புனே அணி 34-33 என்ற புள்ளிக்கணக்கில் குஜராத் அணியை தோற்கடித்தது.

>>>>><<<<<

2025ஆம் ஆண்டுக்கான சாம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டி குறித்து சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் நிர்வாகிகள் நேற்று காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினர்.

பாதுகாப்பு காரணங்களால் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள போட்டிகளில் பங்கேற்க முடியாது என்று இந்திய அணி அறிவித்துள்ளதால், அது குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

பாகிஸ்தானை தவிர்த்து வேறொரு நாட்டில் போட்டியை நடத்தினால், அதில் இந்திய அணி பங்கேற்கும் என்று ஏற்கனவே இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய துணைத் தலைவர் திரு. ராஜீவ் சுக்லா, வீரர்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்று கூறினார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் - சர்வதேச கிரிக்கெட் வாரியம் இடையே பேச்சுக்கள் நடைபெற்று வருவதாகவும், மத்திய அரசு எத்தகைய அறிவுறுத்தலை வழங்குகிறதோ அதன்படி இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் நடந்து கொள்ளும் என்றும் திரு. ராஜீவ் சுக்லா கூறினார்.

**>>>>>END<<<<<**